# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் **34**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

# மத்திய மாகாணத்தில் இடஒதுக்கீடு!

பஞ்சாப்ராவ் தேஷ்முக்



“வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது” என்ற பேரறிஞர் அண்ணாவின் அன்றைய முழக்கம் இன்றும் பொருந்துகிறதா? இல்லை. இன்று தென்னிந்திய மாநிலங்களில் வசூலிக்கப்படுகிற வரி மூலம்தான் வடக்கு வாழ்கிறது. இன்று தெற்கு வாழ்வதால்தான் வடக்கும் வாழ்கிறது என்றால் மிகையாகாது. 50 ஆண்டுகளுக்கு முன்னர், தேய்ந்திருந்த தெற்கு, வடக்கை வாழவைக்கும் அளவுக்கு முன்னேறியதற்கு காரணம் என்ன? பல காரணங்கள் உண்டு என்றாலும், வடக்கை ஒப்பிடுகையில் தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இடஒதுக்கீட்டுக் கொள்கை நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டதும் ஒரு காரணம் என்று சொல்வதில் பிழையில்லை.

பண்பாட்டிலும் நிலவியலிலும் மாறுபட்டிருக்கும் வடக்கிற்கும் தெற்கிற்கும் நடுவில் அமைந்துள்ளது மத்திய மாகாணம். இன்றைய மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா மாநிலத்தின் சில பகுதிகள் இணைந்ததே அன்றைய மத்திய மாகாணம் (CENTRAL PROVINCE). 1861-இல் உருவாக்கப்பட்ட மத்திய மாகாணத்தில் இடஒதுக்கீட்டுக் கோரிக்கைகளின் நிலவரம் எவ்வாறு இருந்தது?

மத்திய மாகாணத்தில் நான்கில் ஒரு பங்கினர் பழங்குடிகள். இன்று மத்திய பிரதேசத்தில் 20%, சத்தீஸ்கரில் 32% இடஒதுக்கீடும் பழங்குடியினருக்கு உள்ளது. மத்திய மாகாணத்தில் 1908-இல் பள்ளிசெல்லும் வயதுடைய பழங்குடியினச் சிறுவர்களில் 3% மட்டுமே பள்ளிகளில் சேர்ந்திருந்தனர். மெக்காலே அறிமுகப்படுத்திய ‘பொதுக்கல்வி முறை’யை 1835-இல் வில்லியம் பெண்டிங் பிரபு நடைமுறைப்படுத்தினாலும், பழங்குடியினர் மத்தியில் கல்வியைப் பரப்புவது மிகுந்த கடினமான செயலாக இருந்தது என்று, பிரிட்டிஷ் அரசின் அறிக்கை கூறியது.

## பழங்குடிகளின் நிலை

காடுகளிலும் மலைப்பிரதேசங்களிலும் வாழும் பழங்குடியினக் குழந்தைகளைப் பள்ளிக்கு வரவைப்பது கடினமாக இருந்தது. அவ்வாறு அவர்களைப் பள்ளிக்கு வரவழைத்தாலும், அவர்களில் சிலருக்கு மட்டுமே கற்றுக்கொள்வதற்குத் தேவையான கவனமும் திறனும் இருந்தன என்று பழங்குடியினரின் கல்வியறிவின்மைக்குக் காரணம் சொல்லப்பட்டது. பழங்குடி மக்களிடம் கல்வி பரவாத நிலையில் இடஒதுக்கீட்டுக் கோரிக்கைகள் எழுவதற்கான சமூக நிலைமைகள் இல்லை. உண்மையில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, வனப்பகுதியில் வாழ்ந்த பழங்குடி மக்களின் செலவில் உயர்சாதியினர் கல்வி கற்றனர்.

1921-இல் மத்திய மாகாணத்தின் ஒட்டுமொத்த கல்வியறிவு விகிதம் 4.8%. இந்தியாவின் மிகப்பெரிய பழங்குடியினமான ‘கோண்டு’ இனத்தவர்களின் கல்வியறிவு விகிதம் 1.1% (ஆண்கள்), 0.1 (பெண்கள்). ஆனால், பிராமணர்கள் (26.7 %), பனியாக்கள் (27.9%), காயஸ்தாக்கள் (35.9%) கல்வியறிவு பெற்றிருந்தனர். கல்வியிலும், அரசு நிர்வாகப் பணியிலும் உயர்சாதியினர் ஏகபோகமாக இருந்தனர். குறிப்பாக, 1912-இல் உயர்கல்வி பயின்ற பிராமண மாணவர்களின் எண்ணிக்கை (2280), மற்ற அனைத்துச் சாதியினரின் (1970) எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தது.

அண்டைய மாகாணங்களில் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்து இயங்கிய ஜோதிராவ் ஃபூலே, சாகு மகராஜ், அண்ணல் அம்பேத்கர் உள்ளிட்ட பார்ப்பனரல்லாத தலைவர்களின் தாக்கம் மத்திய மாகாணத்திலும் இருந்தது. ஜோதிராவ் ஃபூலே தொடங்கிய சத்யசோதக் சமாஜம் மத்திய மாகாணத்திலும் பல்வேறு கூட்டங்களை நடத்தியது. 1911-ஆம் ஆண்டு ஏப்ரலில் பூனா நகரில் நடந்த முதல் சத்தியசோதக் சமாஜத்தின் மாநாட்டில் மத்திய மாகாணத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அதே போல் சத்தியசோதக் சமாஜம் உருவாக்கிய பார்ப்பனரல்லாதார் உணர்வை ஒட்டி, பம்பாய் மாகாணத்தில் தொடங்கப்பட்ட பார்ப்பனரல்லாதார் கட்சி போன்று மத்திய மாகாணத்திலும் பார்ப்பனரல்லாதார் கட்சி தொடங்கப்பட்டது. இருப்பினும், அக்கட்சி மத்திய மாகாணத்தில் பரவி இருந்த இந்தி பேசும் மக்களை ஒருங்கிணைக்கும் இயக்கமாக வளரவில்லை. மத்திய மாகாணத்தில் இருந்த மராத்தி பேசும் மக்களை உள்ளடக்கிய இயக்கம் என்ற அளவில் மட்டுமே இருந்தது.

## ஒருங்கிணைக்கும் முயற்சிகள்

மத்திய மாகாணத்தின் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை ஒருங்கிணைக்கும் முயற்சிகளும் நடைபெற்றன. மத்திய மாகாணத்தின் பார்ப்பனரல்லாத இயக்கம் (NON-BRAHMIN POLITICAL ASSOCIATION) சைமன் கமிஷனுக்கு அனுப்பிய கோரிக்கை மனுவில் (MEMORANDUM), “பார்ப்பனரல்லாதார் அரசியல் சங்கம் என்று பெயரில், குறிப்பிட்டுள்ளதைப் போன்று, எங்கள் இயக்கம் பார்ப்பனர்களைத் தவிர்த்த அனைவருக்கும் திறந்திருக்கும். பார்ப்பனரல்லாத அனைத்து இந்துக்கள், முகமதியர்கள், கிறிஸ்தவர்கள், ஜைனர்கள், பார்சிகள் ஆகிய அனைவரும் எங்கள் கட்சியில் சேரலாம்” என்று பார்ப்பனரல்லாத இயக்கம் யாருக்கானது என்று விளக்கியிருந்தது. மத்திய மாகாணத்தின் ‘பார்ப்பனரல்லாதார் அரசியல் சங்கம்’, ‘தாழ்த்தப்பட்ட வகுப்புச் சங்கம்’, பார்ப்பனரல்லாதார் கட்சி ஆகிய அமைப்புகளும் சைமன் கமிஷனுக்குக் கோரிக்கை மனுக்களை அனுப்பினர்.

**1994-இல் மண்டல் ஆணையப் பரிந்துரைகள் செயலாக்கம் பெறும்வரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு தரப்படவில்லை.**

சைமன் கமிஷனுக்கு மத்திய மாகாணத்தின் பார்ப்பனரல்லாத இயக்கம் அனுப்பிய மேற்குறிப்பிட்ட கோரிக்கை மனுவில், வகுப்பு அடிப்படையில் நான்கு வகையிலான தொகுதிகளை உருவாக்கவேண்டும் என்று கோரியது. அதில் பார்ப்பனரல்லாதவர்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பார்ப்பனரல்லாதார் என்று இரண்டு தனித்தனிக் குழுக்களாகப் பிரிக்குமாறு கோரியிருந்தது.

1919-இல் மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டத்தின் கீழ், மத்திய மாகாண சட்டப் பேரவையில் பட்டியல் சாதியினருக்கு (அப்போது தாழ்த்தப்பட்ட வகுப்பினர்) நான்கு இடங்கள் ஏற்கெனவே ஒதுக்கப் பட்டிருந்தன. 1935-இல் இந்திய அரசு சட்டத்தின் கீழ் மத்திய மாகாண சட்டப் பேரவையில் பட்டியல் சாதியினருக்கு 20 இடங்களும், பழங்குடியினருக்கு ஒரு இடமும் ஒதுக்கப்பட்டன. 1950-இல் புதிய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னரும் பட்டியல் சாதி, பழங்குடி வகுப்பினருக்கான இடஒதுக்கீடுகள் தொடர்ந்தன. இருப்பினும், 1994-இல் மண்டல் ஆணையப் பரிந்துரைகள் செயலாக்கம் பெறும்வரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு தரப்படவில்லை.

## நியாயமாக நடத்தப்படவில்லை

மத்திய மாகாணத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குத் தனி இடஒதுக்கீடு கோரிய குரல்கள் இந்திய விடுதலையை ஒட்டிய காலத்தில்தான் வலுப்பெறத் தொடங்கின. 1930-இல் மத்திய மாகாணத்திலும், பின்னர் நேருவின் முதல் அமைச்சரவையிலும் அமைச்சராக இருந்த பஞ்சாப்ராவ் தேஷ்முக், “இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் என்று அழைக்கப்படும் மக்கள் நியாயமாக நடத்தப்படவில்லை. பட்டியல் சாதியினருக்கும், பழங்குடியினருக்கும் வழங்கப்படும் உரிமைகளை இவர்களுக்கும் தரவேண்டும், விடுதலையின் மூலம் கிடைத்த நன்மைகள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் போய் சேரவில்லை” என்று அரசியலமைப்பு நிர்ணய சபை விவாதத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் இடஒதுக்கீட்டை வலியுறுத்திப் பேசினார். பின்னர் காகா கலேல்கர் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டதிலும் இவரது பங்கு இருந்தது.

இந்தியா முழுவதும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 52% இருக்கின்றனர் என்று கணக்கிட்ட மண்டல் ஆணையம், 50% இடஒதுக்கீட்டு உச்சவரம்பைத் தாண்டக் கூடாது என்று பல்வேறு உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் இருந்ததால், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீட்டை மட்டுமே பரிந்துரை செய்தது. மத்தியப் பிரதேசத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 40 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருப்பதாக பலர் கோரும் நிலையிலும், மண்டல் ஆணையம் பரிந்துரைத்த 27% இடஒதுக்கீட்டைக் கூட இன்றும் செயல்படுத்தாத சில மாநிலங்களில் ஒன்று மத்திய பிரதேசம்.

2019-இல் OBC இடஒதுக்கீட்டை 14 விழுக்காட்டிலிருந்து 27 விழுக்காடாக உயர்த்திய மத்திய பிரதேச அரசின் சட்டத்தை 50% இடஒதுக்கீட்டு உச்சவரம்பைச் சுட்டிக்காட்டி, நீதிமன்றம் தடுத்து விட்டது. ஆனால், 2019-இல் 10% இ.டபிள்யூ.எஸ் (EWS) இடஒதுக்கீடு வழங்கும் 103-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், மத்தியப் பிரதேசத்தில் உயர்ஜாதியினருக்கு 10% இடஒதுக்கீடு தரப்பட்டது. அதற்கு நீதிமன்றம் தடை விதிக்கவில்லை.

**...குரல் ஒலிக்கும்**

## கேள்விக்குறியான ஆச்சர்யக்குறி!

“அயோத்தி வழக்கில், நல்ல தீர்வு கிடைக்க வழிகாட்டுமாறு, கடவுளிடம் வேண்டினேன்” என உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி கூறியுள்ள கருத்துக்குக் கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. கடந்த சில நாட்களுக்கு முன், அவரது வீட்டின் விநாயகர் சதுர்த்தி வழிபாட்டின்போது, பிரதமர் மோடி கலந்துகொண்ட வீடியோக்கள் வெளியாகி சர்ச்சையான நிலையில், தற்போது நீதிபதி சந்திரசூட் கூறியுள்ள தகவல்கள் அவரது ஒருபக்க சார்பை வெளிப்படுத்துவதாக, பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். எழுத்தாளர் கார்த்திக் வேலு, அவர்களின் பதிவு இது.

“உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட் அவர்கள், தலைமை நீதிபதியாக அப்பட்டமாக ஒருதலைப் பட்சமாக வழக்குகளில், தீர்ப்பு வழங்கவில்லை என்றாலும், பல இடங்களில் அரசை எதிர்த்து பல நடவடிக்கைகள் எடுக்க வாய்ப்பிருந்தும் அமைதி காத்தது உண்மை.

தேர்தல் பத்திரங்கள் சட்டத்துக்குப் புறம்பானவை என்ற தீர்ப்பு சரிதான். ஆனால், அந்தத் தீர்ப்பு வரவேண்டிய தொகை எல்லாம் வந்து சேர்ந்தபின் வந்த தீர்ப்பு. அதே போல சட்டத்துக்குப் புறம்பானது என்று தீர்ப்பு வந்தபின் அப்படி நிதி அளித்தது யார், அதில் நிகழ்ந்த முறைகேடுகள் என்ன என்பது குறித்து, தானாக முன்வந்து (Suo Moto) ஒரு வழக்கை முன்னெடுப்பதும் கடினமல்ல. ஆனால், தீர்ப்பை அளித்ததோடு முடித்துக் கொண்டார்.

இவை அப்போது பெரிய விஷயமாகத் தெரியாவிட்டாலும், இப்போது அது வேறு மாதிரி பொருள்படுகிறது. சந்திரசூட் அவர்களுக்கு இது குறித்து, தன்னிலை விளக்கம் அளிக்கும் ஒரு தேவை உள்ளது. ஆனால், பிரதமரை விநாயக சதுர்த்தி விழாவுக்கு அழைத்ததே ஒரு ‘தன்னிலை விளக்கமோ’ என்ற எண்ணமும் எழுகிறது. ஆச்சரியக்குறியாக ஆரம்பித்த இந்தச் செய்தி, இப்போது பெரிய கேள்விக்குறியாக விஸ்வரூபம் எடுத்து நம் முன் நிற்கிறது” என எழுதியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவரைச் சந்தித்தத் தருணம்!



ஏ.கே.எம்.கீர்த்தி

எனது தாத்தா ஆ.கருப்பையா கழக முன்னோடி. 2005-ஆம் ஆண்டு கழகத்தின் கலைஞர் விருது பெற்றவர். இந்தப் படம், 2002-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திற்கு சுற்றுப்பயணமாக வருகை தந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்து எடுத்துக்கொண்டது. அப்போது ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றிய அண்ணன் இரா.ஆவுடையப்பன், கருப்பையா பேரன் என அறிமுகம் செய்து வைத்தார். இந்தப் புகைப்படம் என் வாழ்நாளில் கிடைத்த பொக்கிஷம்.

**- ஏ.கே.எம்.கீர்த்தி, மானூர் ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### இலக்கியங்களை ஆராய வேண்டும்!

1958-ஆம் ஆண்டு, சென்னை, பச்சையப்பன் கல்லூரி தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ‘சிந்தனை’ என்கிற தலைப்பில், உரையாற்றினார் பேரறிஞர் அண்ணா. “தமிழ் இலக்கியங்களைப் படிக்கின்ற போதெல்லாம், அவற்றிலுள்ள ஒவ்வொரு கருத்தையும் யார் சொன்னார்கள், எதற்காகச் சொன்னார்கள், எப்பொழுது சொன்னார்கள் எதை விளக்குவதற்காகச் சொன்னார்கள் என்பவற்றை, ஆராய வேண்டும். அப்பொழுதுதான் நம் நாட்டுப் பண்பு எது - வேற்று இனப்பண்பாடுகள் எவை எவை நம் நாட்டில் நுழைந்துள்ளன என்பதை அறியலாம்” என அவரது நீண்ட உரை பல விளக்கங்களை அளித்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**638**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131